# ஞானோதயம்.

(x)

பிரம்மஞான மாதாந்தரப் பத்திரிகை.

தொகுதி 16 } 1926-ஹு பிப்ரவரி-மீ 11உ { பகுதி 8.

To know him everywhere is true wisdom
To Love him everywhere is true desire.
To Serve him everywhere is true action.
This self-revealing of God is the highest revelation, all others are subservient and partial.

உ

மொழிபெயர்ப்பு.

எங்குமே ஈசன் இருப்பதை யோர்தல்
ஏற்றமதான மெய்ஞ்ஞானம்
எங்குமே அவனை இனிது நேசித்தல்
இன்பமதாம் நிஜ இச்சை
எங்குமே அவனின் பணியென உழைத்தல்
ஈசனுக்குகந்த மெய்க் கருமம்
நற்குருவின் ஞானமே பரமாம்
நாடுமற்றவை யெலாமபரம்.

கே. எஸ். ராமஸ்வாமி ஐயர்.

994

*Registered No. M. 2095.*

OFFICE OF THE REGIS... 22 FEB... OF MADRAS

# ஞானோதயம்

—(x)—

பிரம்மஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரீகம், முதலிய
உயர்நல விஷயங்களைப் பரவச்செய்யும் ஓர்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி 16 | 1926-ஆம் பிப்ரவரி-மீ 11உ | பகுதி 8.

## பொருளடக்கம்.

1. உலகப் பொதுச்சமயம்
(பத்திராதிபர்மொழிபெயர்ப்பு) ...214
2. திருக்குறளில் இறையருட்கழக உண்மைகள்
மா. வெ. செல்லையப்ப பிள்ளை ...218
3. ஹிந்து ஸ்திரீகளின் மஹிமை
வா. வெங்கிடசிவாவதானி ...220
4. உலகினருக்கு நாமளித்துதவவேண்டிய உபதேசங்கள்
P. R. சுந்தரராஜய்யர் ...227
5. ஜகத்குருவின் வருகை (நவசக்தி). ...232
6. ஸ்ரீவமாண்ட சமூகமே ஸகோதர பூமியாகும்
P. R. சுந்தரராஜய்யர் மொழிபெயர்ப்பு. ...237
7. மஹரிஷி ஒருவர் திவ்யஞானஸபையோருக்கு
எழுதிய செய்தி (புதுயுகம்) ...239
8. ஸ்ரீ மைத்ரேய பகவான் மதுரமொழி (புதுயுகம்). ...241
9. சமாசார குறிப்புகள். ...242
10. புஸ்தக விளம்பரம். ...244

சந்தா விபரம்:—
வருஷ சந்தா உள்நாடு ரூ 1—0—0, வெளிநாடு ரூ 1—8—0.
தனிப்பிரதி ரூ 0—2—0.

பிர்—V. இராமச்சந்திர நாயுடு, எனங்குடி,
தஞ்சாவூர் ஜில்லா.

ஸ்ரீ இராமச்சந்திரா அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

21080

# உலகப் பொதுச் சமயம்.*

பிர்ம்மவித்தை என்பது, இப்பொழுதுள்ள மதங்களுக்கும் இதற்கு முன்னிருந்தவைகளுக்கும் மூலம். ஸனாதனமான இப்பிரம்ம வித்தியா விருக்ஷத்தின் கிளைகளே உலகிலுள்ள ஸகல மதங்களும். இவைகள் எல்லா ஜாதிகளிலும் வியாபித்திருக்கின்றன. பிரதி மதமும் மானிட விருத்திக்கு அவசியமானமட்டில் ஸத்தியத்தை வெளிப்படுத்திக் காட்டி, அதையே முக்கிய தர்மமாக நிரூபித்து, மானிடர்களின் மதம், நீதி விக்ஞானாதி சக்திகளை பலப்படுத்துகின்றது. இப்பொழுது ஸர்வத்திர ஸகோதரபாவம் முக்கியமாயுள்ள இந்தப் புதுயுகத்தில் அவதரிக்க இருக்கும் ஸ்ரீ ஜகத்குருவின் வருகைக்கே மதங்களெல்லாம் உலகில் சித்தப்படுத்தி வருகின்றன.

இப்போதைய ஸ்திதிகளால் உலகம் ஸ்வஜாதி பாவத்தை அதிக்கிரமிக்கின்றது. அர்த்த விஷயங்கள் ஆராய்ச்சி செய்யப்படும் பொழுது நானா ஜாதிகளுக்கும் ஸம்பந்தப்படக்கூடியதாய் ஆராய்ச்சி செய்யப்படுகின்றன. ஸர்வதேசக் கூட்டமும் (League of Nations) ஸர்வ ஜாதிகளின் ஸமரஸபாவ உதயத்தை சூசிப்பிக்கின்றது. இவ்விதமே விக்ஞான விஷயங்களிற்கூட பிரதிஜன ஸமூகத்தாரும், இதர ஜன ஸமூகத்தாரின் அபிவிர்த்தியை யனுசரித்தே தங்களுடைய அபிவிர்த்தி யுண்டாகவேண்டுமென யோஜிக்கும் ஸ்திதி ஏற்பட்டிருக்கிறது. மதவிஷயங்களிற்கூட இவ்விதமே யிருக்கின்றது. இம்மூன்று ஜகத்கிளர்ச்சிகள் நமக்கு வேண்டாமென்றாலும் நம்மேல் விழுன்றன. எவ்விஷயமாயினும் உலகிற்கெல்லாம் அனுகூலமா யிருக்கும்படியே யோஜிக்கப்

* பிர்ம்மவித்தியா மஹாஸபையின் ஜூபிலி மஹோத்ஸவ ஆரம்ப தினத்தில் (24—12—1925.) ஸ்ரீமான் ஸி. ஜினராஜதாஸர் அவர்களால் ஆங்கிலத்தில் செய்த உபந்யாஸச் சுருக்கம், பத்திராதிபரால் மொழிபெயர்க்கப்பட்டது.



படுகின்றது. இப்பொழுதும், ஒவ்வொருவருக்கும் தம் தம் மதங்கள் உத்கிருஷ்டமாயுள்ள தர்மங்களை அளிக்கினும் அர்த்த, விக்ஞான வியவஸ்தைகளைப் போலவே மதமும் உலகப் பொது மதமாக விருக்கின்றது. இதுவும் அவசியமில்லையெனினும், வந்துகொண்டே யிருக்கின்றது. மானிடன் தான் சரீரம் அல்லவென்பதாக கிரஹிக்கிறான்

மனித தத்துவத்தைக் குறித்து ஐம்பதுவருஷங்களுக்கு முன்னால் இருந்த அபிப்பிராயம் இப்பொழுது மாறிப் போய் விட்டது. மனிதன் ஸ்தூல சரீரத்தைத் தரித்த ஆன்மாவென்றும், சரீர தாரணத்தால் ஆன்மாவின் நிஜசக்தி பூர்த்திக் குறைவாய் வியக்தமாகின்றதென்பதாகவும் இப்பொழுது வரவரத் தெரிந்துகொள்கிறார்கள். ஸனாதன மதங்களில் மானிடதத்துவத்தைக் குறித்து என்ன சொல்லப்பட்டிருக்கின்றனவென்பதைப் பார்ப்போம். ஹிந்துமதத்தில் "ஸோஹம்" முதலாயுள்ள வாக்கியங்களாலே மனிதனுக்கும், ஈச்வரனுக்கும் ஐக்கியம் போதிக்கப்பட்டிருக்கின்றது. பௌத்த மதத்தில் முக்தி அந்தரங்கத்திலேயே உண்டாகவேண்டுமென்பதாகவும், மேலும் அதை அடைவதற்கு சாதனங்களெல்லாம் மனிதனிடமாகவே இருக்கின்றனவென்பதாயும் சொல்லப்பட்டிருக்கின்றன. "பகவான் தன் ஸ்வரூபத்தில் மனிதனை சிருஷ்டித்தார்", "பகவான் மானிடகோடியை விட்டிருக்கமாட்டார்", "புருஷார்த்த ஸாதனங்கள் உன்னிடமே யிருக்கின்றன" முதலாயுள்ள வாக்யங்களாலே இந்த தத்துவத்தையே கிறிஸ்தவமதம் போதிக்கின்றது. மஹம்மதியமதம்—அதில் முக்கியமாய் ஸூபி மதத்தில் "ஈசுவர சக்தியெல்லாம் ஏதோ ஒரு சூக்ஷ்ம விதத்தில் மனிதனிடம் புதைந்திருக்கின்றன" முதலாயுள்ள வாக்கியங்களாலே இந்த தத்துவம் சொல்லப்படுகின்றது.

மனிதனிடம் ஜகத்தெல்லாம் புதைந்திருக்கின்றன. சில சமயங்களில் ஈசுவரசக்தி மனிதனிடம் பிரதிபலிக்கும். ஈசுவரனிடம் காணப்படும் லக்ஷணங்களெல்லாவற்றையும்

தாய் தனது குழந்தையினிடம் காண்பாள். அவ்விதமே பாரி யாள் பர்த்தாக்களும், சகோதரி சகோதரர்களும் ஒவ்வொ ருவரிடமும் ஈசுவர லக்ஷணங்களைப் பார்ப்பார்கள். இவ் விஷயங்களை எல்லா மதங்களும் அங்கீகரிக்கின்றன. மேலும் உலகத்திற்குப் பொதுவாயுள்ள மதத்தில், மனிதன் ஈசுவ ரனை எங்கேயோ தூரத்திலுள்ள சுவர்க்கத்திலோ, இந்திரி யங்களுக்குக் கோசரமாகாத மற்றெந்தலோகத்திலேயோ வினை யாமல், தனது சமீபத்தில் இந்த லோகத்திலேயே பார்க்கக் கூடும். அதாவது, தன்னோடொத்தவர்களிடமே அமிர்தத்வத் தை, தெய்வத்வத்தைப் பார்க்கக்கூடும். உலகப் பொதுமதம் இப்பொழுதுள்ள மதங்களை நாசஞ்செய்யாது. எம்மதமும் கூட தனது உபயோகத்தை விட்டொழிக்காது. பிரதி மதத் தின் மஹத்துவம் நின்றிருக்குமேயொழிய அம்மதங்களின் உத் தேசம் ஈசுவரதத்துவங்களை கிரஹிப்பதே யல்லாமல், மனித னுடைய தத்துவத்தையும் கிரஹிப்பதாக விருக்கும்.

இதுவுரைக்கும், மனிதர்கள் தங்களுடைய இஹ லோக விஷயங்களைக் குறித்து ஆராய்ச்சி செய்யும்பொழுது ஐகமத்யமேற்பட்டு, பரஸ்பர பேத பாவங்களின்றி பிரவர்த் தித்துக்கொண் டிருந்தார்களே ஒழிய ஈசுவரனைக் குறித்து ஆராய்ச்சி செய்யும்பொழுது பின்ன அபிப்பிராயமுள்ளவர் களானார்கள். அது அவ்விதமிருக்கத் தகாது: ஏனெனில், எங்கிருந்தாலும், அது ஈசுவர லக்ஷணமே. மேலும் ஒவ்வொருவரிடமும் சாமான்ய விஷயங்களையே கிரஹித்து பரஸ்பர சிநேகவலில் ஆசையுடையவர்களாயிராமல், பேதங்க ளையே கண்டுபிடித்துத் துவேஷிக்கிறார்கள். எம்மதத்தைச் சேர்ந்தவராயினும், எம்மதத்திற்கும் சேர்ந்திராதவராயினும், ஸ்திரீகளும் புருஷர்களும், ஏக தரிசன ஜீவியத்தில் ஆசக்தி யுடையவர்களாகி, பரஸ்பர கௌரவ சகோதர பாவங்கள் ஏற்பட்டுக் கலந்துறவாடி இருத்தலுக்கு அமைதல் பிரம்ம ஞான ஸமாஜத்திலேயே ஒழிய வேறெங்கும் காணப்பட மாட்டா. மனிதனிடம் பரம ரகசிய தத்துவத்தைக் கண்டு கொள்வதற்குச் சாத்தியப்பட்டமட்டில் முயற்சிப்பவர்களாகி



பரஸ்பரம் ஒருவருக்கொருவர் அநுகூலிகளாகி யிருப்பவர் கள் இந்த ஜகத் ஸாமான்ய மதத்தை கிரஹிக்கக் கூடியவர் களாவார்கள். இப்பொழுது இங்கு 40 தேசங்களின் பிரதி நிதிகள் ஒருங்கு சேர்ந்தவர்களாகி இதராளுடைய பேதங் களை விஷயமாகக் கொள்ளாமல், அவைகளை அதிக்கிரமித்து, ஐகமத்யத்தைத் யடைந்திருக்கிறார்கள். பிரம்மஞான ஸமா ஜத்தார்கள் தங்கள் ஸ்வஜாதியின் விக்ஞான மதசக்திகளையே யன்றி, ஜகத்துக்குப் பொதுவான மதத்தையும், விக்ஞானத் தையும்கூட பொருட்டாக எடுத்துக்கொள்வார்கள்.

பிரம்மஞான ஸபையார் இன்னுமொரு சத்தியத்தைக் கூடத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். அது யாதெனின், பிரதி மஹா குருவும் மனிதனுக்குத் தன் ஸ்வ சக்தியைக் காட்டுவதற்கு அவதரித்தார் என்பதாகவும், மேலும் ஒவ் வொருவனும் தன்னிடமும், தன்னோடொத்தவர்களிடமும் ஈசுவரனைப் பார்க்கக்கூடுமென்பதாகவும்——

ஆஶ்சர்யவத் பஶ்யதி கஶ்சிதேந
மாஶ்சர்யவத் வததி ததைவ சாந்ய꞉ ।
ஆஶ்சர்யவச்சைநமந்ய꞉ ஶ்ருணோதி
ஶ்ருத்வாப்யேநம் வேத ந சைவ கஶ்சித் ॥

நமது ஸ்வபாவத்தைப் பார்ப்பதற்கும், கேட்பதற்கும், ஆச்சரியமாக விருக்கும். அந்த ஸ்வபாவத்தையே ஜகத்துக் குப் பொதுவான மதம் நமக்கு போதிக்கும். வெளிப்படை யான சின்னங்களை மாத்திரமல்லாமல் நம்மிடம் ஈசுவராம்சத் தால் இதரர்களைக் குறிப்பிட்டறிந்துகொள்ளவும் செய்யும். மேலும் அம்மதத்தால் மனிதனுடைய முடிவான நிலை நமக்கு கோசரிக்கும். இது கோசரிக்கவே ஈசுவரனது ஸ்வரூபத்வம் தெரியும்.

நாமந்த ஈசுவரனை எவ்விதம் தெரிந்துகொள்ளக்கூடும்? ஈசுவரன் ஊர்த்துவ லோகங்களிலே மாத்திரமல்லாமல், இந்த லோகத்திலேயே, ஆக்கத்தால் நிறைந்துள்ள இந்த மானிட

லோகத்திலேயே பார்க்கக்கடவோம். அவ்விதம் பார்க்க ஏற்படுதலே ஞானம்.

நாம் எங்கு எந்த வியாபகத்திலிருக்கினும், நம்மோடொத்தவர்களிடமே, ஈசுவரனைப்பார்த்து அதுவே நமக்குப் பிரார்த்தனை ஸ்தானமாகப் பார்ப்போமேயாயின், உன்னிடம் ஈசுவரனைக் காணக்கடவாய்.

மற்றொரு சத்தியம் „தத்வமஸி'' எனும் வாக்கியத்தை மனனஞ் செய்வோமோயாகில், நாம் எவர் முகத்தைப் பார்க்கினும் அதனிடம் அந்த தத்பதார்த்தத்தையே பார்ப்போம். இதின் உண்மையே எல்லாமதங்களிலும், ஜகத்ஸாமான்ய மதத்திலும் கூட காணப்படுகின்றது.

ஜாதி மதாதிபேதங்களில் ஸம்மந்தமின்றி மனிதனுடைய ஜீவிதம் சுலபமாகின்றது. உண்மையில் மானிடர்களெல்லோரும் ஈசுவராம்சர்கள். தற்காலத்தில் இந்த தத்துவத்தை கிரஹித்து, மனிதர்கள் ஒவ்வொருவரையும் ஈசுவரனது அம்சமாகப் பார்த்து, தமது நிழல் தம்மை அனுசரிப்பதுபோலவே ஈசுவரனும் தமது நிழலை விட்டொழியார் என்பதாகவும் கிரஹிப்பார்கள்.

---

# திருக்குறளில் இறையருட்கழக உண்மைகள். (THEOSOPHY.)

(174-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

பின்னொருவன் தனக்குத் துன்பத்தைச் 'செய்தாலும் ஒருவன் அதற்குப்பதிலாக அவனுக்கு நன்மையையே செய்ய வேண்டும் என்னும் சிறந்த கருத்தை நாயனார் இன்னா செய்யாமை என்னும் அதிகாரத்தில்,



இன்னாசெய்தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்துவிடல் என்றும்
மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல் என்றும்

கூறியிருக்கிறார்.—

"உலகில் மக்கள் உலகவாழ்வு இனிது நடைபெறும் பொருட்டு அதற்குத்தக ஒழுகல்வேண்டும்; தன் நலம் மறந்து பிறர்நலம் நாடியே மனம் வாக்குக் காயங்களினால் வேலை செய்தல் வேண்டும்.'' என்றும் நமது இறையருட் கழகத்தின் சீரிய கருத்துக்களை நாயனார் பொதுவாக ஒப்புரவறிதல், என்னும் அதிகாரத்திலும் சிறப்பாகப் பிற இடங்களிலும் கூறி யிருக்கின்றார். இந்த அதிகாரத்தில் பிறர் நலம் நாடி ஒழுகல் என்பதைப்பற்றி நாயனார் பலவாறு கூறியிருக்கிறார். அவைகளில் இரண்டு கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லுகிறேன். மேகமானது யாதொரு கைம்மாறுங் கருதாது உலகிற்கு மழைபொழிவதுபோல தங்கள் கடப்பாடு இன்னதென்று அறியும் அறிவுடையோர்கள் யாதொரு கைம்மாறும் கருதாமல் பிறருக்கு உதவி செய்வார்கள் என்று.—

கைம்மாறுவேண்டா கடப்பாடுமாரிமாட்
டென்னாற்றுங்கொல்லோ வுலகு என்றும்

குறளிலும்,

"உலகவாழ்வு இனிது நடைபெறும் பொருட்டு ஒழுகும் மக்களே உயிருடையவர்களாவார்கள்; மற்றவர்கள் இறந்தவர்களுக்கு ஒப்பானவர்கள்'' என்று.—

ஒத்ததறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப்படும் என்றும்

குறளில் கூறியிருக்கிறார்.

மக்கள் நலத்தையும் முன்னேற்றத்தையும் நாடியே பெரியோர்கள் உலகில் வேலை செய்துகொண் டிருக்கிறார்கள் என்றும், பெரியோர்கள் இல்லாமல் உலக வாழ்வு இனிது

னைடபெறாது என்றும், நமது கழகத்தில் கூறும் அரியகருத்தைத் திருக்குறட்பாவின் மூன்றாவது நீத்தார் பெருமை என்னும் அதிகாரத்தில் குறிப்பிக்கப்பட் டிருக்கின்றது. மக்கள் உய்யும்பொருட்டு அறம் உணர்த்தும் பெரியோர்களை "நீத்தார்" என்றும் 'குணமென்றுங் குன்றேறி நின்றார்' என்றும் "எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணர்", என்றும் நாயனார் கூறி அவர்கள் பெருமை அளவிட்டுச் சொல்லற்பாற்றன்று என்று சொல்லி யருளினர்.

இன்னம் எத்தனையோ சிரிய கருத்துக்கள் திருக்குறளில் அடங்கியுள்ளன. அவைகளை எல்லாம் எடுத்து எழுத நேரமில்லாத்தால் இம்மட்டில் நிறுத்தினேன். ஒன்றும் எழுதாம லிருப்பதற்கு ஏதாவது சில கருத்துக்கள் எழுதி அனுப்பலாம் என்று இவைகளை எழுதினேன். நான் அங்கேவந்து தங்கள் முன்னிலையில் சொற்பொழிவு (பிரசங்கம்) செய்யாததற்கு தங்கள் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்.

மா. வெ. நெல்லயப்ப பிள்ளை.

## ஹிந்து ஸ்திரீகளின் மஹிமை.

1. ஸ்ரீ ஸரஸ்வதிதேவி ஸ்திரீ புருஷர்களுக்கும், தெய்வதைத்தியர்களுக்கும் வித்தியாகுரு. அவளது அத்தையான லக்ஷ்மிதேவியும் லக்ஷ்மி பர்த்தாவான நாராயணனோடு கூடப்பிறந்த பார்வதியும், அவர்களுடைய பக்தர்களுக்கு வைஷ்ணவ சைவ ஆகமங்களை உபதேசித்த குருக்கள். பிரதி வருஷம் ஆசுவயுஜமாதத்தில் முதல் பத்து தினங்களில், ஸேதுஹிமாசல பரியந்தம் வியாபித்து, பாரததேசமெல்லாம், மஹாலக்ஷ்மி, மஹாகாளி, மஹா ஸரஸ்வதி இவர்களை ஹிந்து மதஸ்தர்கள் பூஜைசெய்து வருகிறார்களன்றோ!

2. இதர தேவதா ஸ்திரீகள்கூட வித்தியாவந்தர்கள் என்பதற்குச்சில உதாரணங்களுண்டு. தேவேந்திரனுடைய பாரியான இந்திராணி, தன் தபோமஹிமையால் வைதவ்யமில்லாமல் செய்துகொண்டதால், அவளை வேதத்தில் "அவிதவா" அதாவது நித்திய சுமங்கலி என அழைப்பார்கள். இப்படிப்பட்டவர்களே யமனுடைய பாரியான யாமீ தேவி முதலாயுள்ள தேவதாஸ்திரீகள். ஆனதுபற்றியே தினந்தோறும் தேவதைகளுக்கும் தேவதா பத்தினிகளுக்கும், தர்ப்பணம் செய்யவேண்டுமென்பதாக வேதம் விதிக்கின்றது.



3. வேதங்களிலுள்ள ரிக்குகளும், தமது தபோ மஹிமையால் கண்டுபிடித்த ஞான நிஷ்டர்களில் புருஷர்களுக்கு ரிஷிகளென்றும், ஸ்திரீகளுக்கு ரிஷிணிகளென்றும் பெயர். வசிஷ்டாதிகளான ரிஷிகளைப்போல் ஸ்திரீகளிலுள்ள ரிஷிகள் கூட சில ரிக்குகளைக் கண்டுபிடித்து உலகோர் அனுஷ்டிக்கும் வண்ணம் ரிக்குவேதாதிகளில் இருக்கின்றன. ரிஷிகளுக்கும், ரிஷிணிகளுக்கும், நித்திய தர்ப்பணம், துவிஜர்களான பிராமண க்ஷத்திரிய வைசியர்களுக்கு கர்த்தவ்யமன்றோ! ஹிந்துக்களில், விவாஹம் நடந்த இரவு வசிஷ்டமஹாரிஷி பாரியையான அருந்ததியை நக்ஷத்திர மண்டலத்தில் காண்பிக்கும் வழக்கம் எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. அவளது தாயார் தேவஹூதி, தகப்பனார் கர்த்தமப்பிரஜாபதி, தம்பி விஷ்ணு அவதாரமான கபிலமஹாரிஷி. ஏதோ ஒரு சாபத்தால் அருந்ததி, சண்டாள ஸ்திரீயானாள். தன்னுடையவும், பர்த்தாவினுடையவும், தபோமஹிமையின் வலிவாலும், மீளவும் ரிஷிலோகத்தில் ஜனித்து இன்றைக்கும் வசிஷ்ட பத்தினியாக இருக்கிறாள்.

4. அவ்விதமே அத்திரி மஹாரிஷி பாரியையான அனசூயா தேவியின் மஹிமை வர்ணிக்கும் தரமன்று. அவள் 10-வருஷங்கள் பஞ்சம் உண்டாகவே, தனது தபஸால் ஜனங்களுக்கு அன்னம் உண்டாக்கி இட்டதாகவும், ஜலமில்லாத பொழுது சுவர்க்கத்தினின்று கெங்காதீர்த்தத்தைத் தருவித்து தானஞ்செய்ததாகவும், வெயிலால் உபத்திரவப்படுங்காலையில் ஏழு இரவு சூர்யோதயமாகாமல் செய்ததாகவும் அத்திரி மஹரிஷி ஸ்ரீ ராமச்சந்திரருக்குச் சொன்னதாக ஸ்ரீமத் ராமாயணத்தில் அயோத்தியா காண்டத்திலிருக்கின்றன.

5. அத்திரிமுனி பெண்ணான ஆத்திரேயி, அகஸ்தியப் பிரமுகர்களோடு கலந்து உபநிஷத்துக்களை வால்மீகி ஆக்ஞையால்படித்ததாக உத்தரராம சரித்திரத்திலிருக்கின்றது.

6. வாசக்னுரிஷியின் பெண்ணான சார்க்கிக்கு கல்யாணம் இல்லையென்றும், துவக்கத்தினின்று பிர்ம்மவாதினியென்றும், அவள் யாக்ஞவல்கிய மஹரிஷியை இரண்டு பிரச்னைகள் ஆத்ம தத்துவத்தைக் குறித்து ஜனகர் ஸபையில் போட்டதாகவும், யாக்ஞவல்கிய ரிஷி தன் பாரியையான மைத்திரேயிக்கு ஆத்மதத்துவத்தை உபதேசஞ் செய்ததாகவும், பிரஹதாரண்ய உபநிஷத்திலிருக்கின்றன. அதிலேயே பண்டிதையான பெண்ணைப் பெறுவதற்குக் கோரிக்கையுள்ளவர்களுக்கு உபாயம் கூட இருக்கின்றது. சூதஸம் ஹிதையில் துவிஜ ஸ்திரீகள் வேதமோதுதல் சிவபெருமானின் ஸம்மதமெனவிருக்கின்றது.

7. ஸ்ரீ சீதா மஹாதேவி இலங்கையிலுள்ள நதியோரம் சந்தியாவந்தனம் செய்ததாக சுந்தரகாண்டத்தில் இருக்கின்றது. அவ்விதமே மஹாசுவேதைகூட சந்தியாவந்தனம் நடத்தியதாகக் காதம்பரியில் இருக்கின்றது. ஆனதால், பூர்வ காலத்தில் ஸ்திரீகளுக்கு விவாகம் புருஷர்களைப்போல் இஷ்டத்தைப்பொறுத்ததென்றும் நிர்ப்பந்தமன்றென்றும், துவிஜ ஸ்திரீகளுக்கு உபநயனமிருந்ததாகவும் ஸ்மிருதிகளிலிருக்கின்றன. நாராயண பாரத பாகவத யோகவாசிஷ்டாதி கிரந்தங்களில், கௌசலை, சுமித்திரை, சீதா, தாரா, மண்டோதரி, காந்தாரி, குந்தி, திரௌபதை, சகுந்தலை, தமயந்தி, சதரூபா, மேனைகை, தேவஹூதி, ருக்மணி, ஸத்தியபாமை முதலாயுள்ள அஷ்டமஹிஷிகளும், விப்ரபத்தினிகளும், கோபிகளும், இந்திரபிரஸ்ததுவாராவதி நாரீமணிகளின்பாண்டித்யம், பக்தி ஞானங்கள், வியவஹார சாமர்த்தியங்கள், பரோபகாரங்கள், மிகவும் அழகாய் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன.

8. சீதா ராமஸம்வாதம், சீதாராவணஸம்வாதம், மண்டோதரீ ராவணஸம்வாதம், திரிஜடா சீதா ஸம்வாதம், மண்டோதரி புத்தி கூறுதல், தாராராம லட்சுமண ஸம்வாதம் இவைகளைப்படிக்கவே அந்த ஸ்திரீரத்தினங்களின் சாமார்த்தியங்கள் நன்கு புலப்படும். சகுந்தலைக்கு தர்மம் நன்றாய்த் தெரிந்ததாக, பாரதம் ஆதிபர்வத்திலிருக்கின்றது. விவாஹத்திற்கு முந்தியே, காந்தாரி குந்தி இவர்கள், தேவதாரிஷிகளை உபாசித்ததால், மந்திரசித்தியை சம்பாதித்ததாகவும் கூட பாரதத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கின்றது. காந்தாரியின் அறிவு, குந்தியின் க்ஷமை, துரௌபதியின் பக்தி ஞானங்கள், உலகப்பிரசித்தமுள்ளவைகளன்றோ! கைகேயி, சுபத்திரை, ஸத்தியபாமை இவர்களுக்கு இதர வித்தைகளில் பரிச்சயமும் தனுர்வித்தையும்கூட அமைந்ததாகப் புலப்படும். சுபத்திரையின் பாக்கிய மென்னவென்று சொல்லத் தகும்! இன்றைக்கும் ஸ்ரீ ஜகன்னாதத்தில் தமையன்களான பலராமர் கிருஷ்ணன் இவர்களோடு ஈசுவரியாக ஹிந்துக்களெல்லோரும் அந்தம்மாளைப் பூஜைசெய்து வருகிறார்களன்றோ! சூடாலை பர்த்தாவிற்கு யோகஞானங்களை உபதேசித்தாள்.



9. ஊர்வசி, யமீ முதலாயுள்ள தேவதா ஸ்திரீகளுக்கும், உத்தம மானிட ஸ்திரீகளுக்கும், வேதத்தில் அதிகாரமுண்டென்பதாக ஸ்ரீமத் ஆசாரிய ஸ்வாமிகள் பிர்ம்ம சூத்திர பாஷ்யத்தில் எழுதினார். விசுவதேவி, கெங்கா என்ற ஸ்திரீகள் வாக்கியாவளியென்னும் பெயருள்ள ஸ்மிருதி ஸங்கிரஹத்தைச் செய்தார்கள். லக்ஷ்மிதேவி மிதாக்ஷரமான தர்ம சாஸ்திரவியாக்யானத்திற்கு டீகா எழுதினாள். லீலாதேவி தர்க்ககேஸரியான உதயனாசாரியாரின் புத்திரி. அந்தம்மாளின் கணிதம் பிரஸித்தமேயன்றோ! ஸ்ரீ சங்கர மண்டன மிசிரருக்கு ஆத்ம தத்வ வாதத்தில் மத்தியவர்த்தி மிசிரரின் பாரியையான உபயபாரதியன்றோ! போஜசரித்திரத்தில் குடும்ப ஸ்திரீகளில் மாமி மருமகள் செய்த ஸம்ஸ்கிருத பதியங்களிருக்கின்றன.

கிறிஸ்து 1205ம் வருஷத்தில் எழுதிய ஸமஸ்த கர்ணாமிருதமென்ற கிரந்தத்தில், பாலிதேவி, சண்டாள வித்யா டோபா, சிலா, பட்டாரிகா, வித்பாவிஜயா, விகட நிதம்பா,

வியாஸ பாதா, என்ற ஸ்திரீகளின் வேலையின் பெயர்கள் உள.

10. கிறிஸ்து 2000 வருஷத்திற்கப்பால் ஸம்ஸ்கிருத பண்டிதர்களாயுள்ள காளிதாஸ பவபூதி போஜராஜ காலங்களில் கூட ஸ்திரீகள் வித்யாவந்தர்களா யிருந்ததாகப் புலப்படும். வரவர அவர்களுக்கு வேத ஸம்ஸ்கிருத ஞானம் குறைந்து, பிராகிருத பாஷா ஞானம் மாத்திரம் உண்டானதாகப் புலப்படும். மாளவிகாக்கினி மித்திர மாலதி மாதவீயத்தில் உள்ள ஸம்ஸ்கிருத நாடகங்களைப் பார்க்க அப்போதைய ஸ்திரீகள், புருஷர்களோடு கல்வி பயின்றதாகவும் சபைகளில் பிரசனைகள் போட்டதாகவும் புலப்படும்.

11. மொகலாயர்கள், துருக்கர்கள், நமது தேசத்திற்கு அரசர்களாக வந்து ஸ்திரீ லோலத்வத்தால், நமது பெண் குழந்தைகளை, சிறையெடுத்துச் சென்றமை பற்றி, அதி ப்ால்ய விவாஹங்கள், வித்யா லோபங்கள் நிகழ்ந்ததாகச் சரித்திரக்காரர்கள் காரணத்தோடு சொல்வார்கள். அவ்வித காலத்தில் கூட, அஹல்யாபாய் முதலாயுள்ள ஸ்திரீ ரத்தினங்கள் அரசு புரிந்ததாகவும், குதிரையேறி யுத்தஞ் செய்ததாகவும், தீர்த்தங்களில் அனேக தானங்கள் செய்ததாகவும் கேழ்விப்படுகிறோமே ? இங்கிலீஷ் பிரபுத்வம் வந்து 150 வருஷங்களுக்கு மேலாகின்றன. இப்பொழுது ஸ்திரீவித்தை மீளவும் நமதுதேசத்தில் பிரபலப்படுவதற்குத் தகுந்த சௌகரியங்கள் ஏற்பட்டிருக்கின்றது. ஆகையால் கீழ்மேல் நாடுகளின் வித்தைகள் அதாவது இந்து தேசத்தில் உள்ள தேசபாஷைகள், ஸம்ஸ்கிருதம், இங்கிலீஷ், புருஷர்களுடன், ஸ்திரீகளும் கூடப்படித்தல் அவசியம். ஆனது பற்றியே எல்லா இடங்களிலும் பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. கல்யாணமான பிறகும் கூட பி. ஏ. முதலிய சாஸ்திர பரீக்ஷைகள் வரைக்கும் படித்தல் அவசியம். எல்லா உத்தியோகங்களிலும், புருஷர்களுடன் கூட ஸ்திரிகளும் பிரவேசித்தாலொழிய தேசம் செம்மைப்படா. காந்தாரி திருதராஷ்டிரனுடைய சபைக்கு வந்து, ஸ்ரீ கிருஷ்ண



2/600

மூர்த்தி, மஹரிஷிகள், பீஷ்மாதி ஞானிகள் கேட்டுக்கொண்டிருக்க, ராஜ தர்மத்தைக் குறித்து கம[illegible] உபன்யாசம் செய்ததாக பாரதம் உத்தியோக பர்வத்தில், ஸ்ரீ கிரு[illegible] பாயனரான வியாஸர் எழுதவில்லையா ? அவ்விதமே இப்போதைய ஸ்திரீகள் தர்ம சாஸ்திரம் முதலியவைகளைப் படித்துப் புருஷர்களுக்கு உதவி ஏன் செய்யப்படாது ? அமெரிக்கா தேசத்தில் ஒரு நகரத்தில் (Missachasetts) முனிசிபல் கம்மிஷனர்க ளெல்லோரும் ஸ்திரீகளே. இன்னொரு ஸ்டேட்டில் கவர்னர்கூட ஸ்திரீயே. சென்னைப் பட்டணத்திலும் குண்டூரிலும், செங்கல்பட்டு முதலிய சில நகரங்களில் முனிசிபல் கம்மிஷனர்களாக ஸ்திரீகள் இல்லையா ? இப்பொழுது விவாஹமான எனது மருமகள் குண்டு அச்சமாம்பா குண்டூர் முனிசிபல் கம்மிஷனராக இருந்து ஸ்திரீகளின் படிப்பை விர்த்தி செய்து வருகிறாள். ஸ்திரீகளுக்குப் பள்ளிக் கூடங்களை ஏற்படுத்தி யிருக்கிறாள். அந்தம்மாள் 40 கிரந்தங்களெழுதிப் பிரசுரம் செய்திருக்கிறாள். எப். ஏ. (F. A.) பரீக்ஷைக்குக் கூட ஒரு வருஷம் ஒரு கிரந்தத்தைப் பாடமாக வைத்தார்கள்.

12. இந்தக் காலத்தில் ஸ்திரீகளுக்கு வித்தை கற்பித்து ஒழுங்குபடுத்துவதற்கு இரண்டு இடையூறுகளிருக்கின்றன. அவைகளை நம்மவர்கள், புருஷர்கள் ஸ்திரீகள் கலந்து, வேறக் களைந்தெறியவேண்டும். பாலிகைகளுக்கு அதிபால்ய விவாஹம் செய்யக்கூடாது. ருதுவானவுடனே நிஷேக முகூர்த்தம் வைக்கப்படாது. இவ்விரண்டும் சாஸ்திரத்திற்கு விருத்தமானாலும், துருக்கர் ஆளுகையினின்று வாடிக்கையிலிருந்து வருகின்றன. விவாஹ மந்தரங்களை நிஷ்பக்ஷபாதமாக புத்தியோடு அர்த்தத்தோடு படிக்கின், அது வதுவரர்கள் வயது வந்தாலொழிய விவாஹம் செய்யப்படாதென்பதான எண்ணம் மாறாது. பையனுக்கு 24 வயது வரைக்கும் பிர்ம்மசரியம், குருகுலவாசம், வித்யாகோஷ்டி அத்யாவசியம். 16 வருஷங்களுக் கப்பால் பெண்ணுக்குக் கர்ப்பாதான காரியம் நடத்துதல் ஆரோக்கியத்திற்கனுகூலம்.

பிரதான ஹோமத்தை வதுவான பெண் வீட்டில் செய்து கொண்டு, வரனான பையன் வீட்டிற்குச் சென்று பிரவேச ஹோமத்தைச் செய்துகொண்டு, மூன்று தினங்கள் அக்கினி ஸாக்ஷியாக தீக்ஷையை வஹித்துப் பின்னர் ஏக சையாசனம் செய்வதற்கு முந்தி சேஷஹோமம் செய்ய வேண்டியிருக்க, இப்பொழுது பொம்மைகளின் கல்யாணத்தைப்போல் ருது ஆவதற்கு முன்னமேயே கிளிப்பிள்ளைச் சொல்போல் மந்தரங்கள் மாத்திரம் படித்து, திரவிய நாசம் வேண்டிய மட்டுஞ் செய்து வதுவரர்களுக்குக் கல்யாணஞ் செய்கிறார்கள். இவ்வித துராசாரம் 150 வருஷங்களுக்கு முன்னமேயே நமது தேசத்தில் இருந்ததாக "உபநயந விவாஹௌ உத்ஸ்ருஷ்டாவேநௌ" என விச்வகுண தர்சனக்காரர்கள் எழுதினார்கள். இதனால் தன விரயமே ஒழிய, பெண்களுக்கு "விவாஹோ வித்யாநாசாய" என்றபடி படிப்பு கெட்டுப் போகின்றது. ஏனெனில், மாமியார் மாமனார்கள் படிப்புச் சொல்லிக் கொடுக்கப் படாதென்பார்களோ என்னமோ வெறும் பயம் தாய் தகப்பன்களுக்கு ஏற்பட்டுப் படிப்பை விட்டொழிப்பவர்கள் சிலர். இதரர்கள் திரவிய லோபத்தாலும் வித்யா லோபத்தாலும், துராசாரப் பிரபாவத்தாலும், பெண்களுக்குப் படிப்பைக் கொடுக்க மறுக்கிறார்கள். சிலர் மாத்திரம் படிப்பைக் கொடுக்கிறார்கள். முக்கியமாய், பெண்களுக்குக் குழந்தைகளை வளர்க்கும் வழி, வீட்டு வேலைகளை நன்றாயும் சுத்தமாயும் செய்யும் வழியையும், உலக வியவஹார ஞானங்களையும் சொல்லிக் கொடுக்கவேண்டும். பெண்களின் பூர்வ ஜன்ம வாசனைகளை யோஜித்து அதற்கனுகூலமாகக் கல்வி கற்பித்தல் வேண்டும். முக்கியமாய் சங்கீதம் கூட கொஞ்சம் கற்பித்தல் அவசியம். சாமான்ய வித்தை வந்தபின்னர் பெண்களின் ருசியை அநுசரித்து அவர்களுக்கு சாஸ்திர விஷயங்களையெடுத்துக்கற்பித்தல் தகும். சுபமஸ்து.

வா. வெங்கடசிவாவதானி.

[தெலுங்கு பிரஜாபந்து பத்திரிகையினின்றும் பத்திராதிபரால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.]



குறிப்பு— 15 வயதிற்குமுந்தி பெண் ருதுவாயின் அவை வியாதிகளால் ஏற்படக்கூடியவை யென்பதாகரிஷிகள் வைத்திய சாஸ்திரங்களில் எழுதியிருக்கிறார்கள். இக்காலத்திய டாக்டர்களுடைய அபிப்பிராயமும், பெண்ணிற்கு 16ம் வயதில்தான் சகல அங்கங்களும் பக்குவமடைகின்றன என்று இருக்கின்றன. பலவியாதிகளுக்கும் அதனால் அகாலத்தில் ருது ஆவதற்கும் காரணம் குருகுலவாசஞ் செய்து சரியானபடி பிர்ம்மசரிய விரதத்தை அனுஷ்டியாத குற்றமே ஒழிய வேறில்லை. சரீரத்திற்கோ சரியான வ்யாயாமம் முதலிய பழக்கமில்லை. நல்ல காற்றில்லை. நல்ல ஆஹாரம் அதாவது இந்திரியங்களுக்குச் சேஷ்டை கொடாத ஆஹாரமில்லை. இந்த நிலைமையில் இனி 10 வயதிற்கு முன்னரே ருதுஆவதில் ஆச்சரியமில்லை. தேசம் க்ஷீணிப்பதிலும் தடையில்லை. இக்காலத்திற்கிணங்க குருகுலவாசத்தில் பிர்ம்மசரிய விரதத்தை யனுஷ்டித்துக் கல்வி முதலியவைகளில் பயிற்சியடையின் பெண்கள் அகாலத்தில் ருது ஆகமாட்டார்கள். அதனால் தேசம் க்ஷேமப்படும்.

பத்திராதிபர்.

---

# உலகினருக்கு நாமளித்துதவவேண்டிய உபதேசங்கள்.

(171-ம் பக்கத் தொடர்ச்சி.)

---

## அதிகாரம் 2.

## கண்டுகொளல்.

இரந்திரந்துருக வென்மனத் துள்ளே யெழுகின்ற சோதியே ! யிமையோர்
சிரந்தனிற் பொலியுங் கமலச் சேவடியாய் ! திருப்பெருந்துறை யுறை சிவனே !
நிரந்தவாகாயநீர் நிலந்தீகாலாயவையல்லையாயாங்கே
கரந்ததோருருவே ! களித்தனனுன்னைக் கண்ணுறக்கண்டு கொண்டின்றே.

—திருவாசகம்.

இனி இவ்வொப்பற்ற மகா நண்பனை மானிடருள் அனைவரும் சிறிதுமுணராமலே தத்தம் பரிபாகத்தின் ஒவ்வொரு ஸ்திதியிலும் தம் சாட்சிப் பொருளாய் ஆக்கிக்கொண்டு அனுபவிக்கின்றனர். அவன் இவ்விதம் ஒருவரும் அறிந்துகொள்ளாமலே யாவர் அனுபவத்திலு நிறைந்து விளங்குந் தன்மை பெற்றிருக்குமிந்த ரகசியம் அவ்வண்ணல் காட்டிவரும் பிரேமை நாடகத்தின் ஓர் அங்கமாகும். அஃதெப்படியெனில் ஜீவர்கள் எந்த ஸ்திதியிலிருப்பினும் அங்கெல்லாம் கடவுள் "கட்டுக்கடங்காத் தன்னையுமவர்கள் மட்டுக்கடக்கி" அவரவரளவில் தனது அன்பெனும் புந்நகையை அவர்க்களிக்கின்றனன். (1) பலவிதங்களான நிலைமைகளில் மனிதர் அனுபவிக்குமின்பமெல்லாம் கடவுளின் அருண்மயமாம் புந்நகையால் விளைகின்றனவென்பது பொருந்துமன்றோ. இவ்விதம் யாவருக்கும் சிறிது சிறிதென்படினும் அவனது பாரமார்த்திக ஸ்திதியில் பெரியோருமவனையுள்ளபடி யறிந்துணர வல்லவராகார்.

---

(1) தெருளாகி மருளாகி யுழலுமனமாய் மனஞ் சேர்ந்து
வளர் சித்தாகியச் சித்தெலாஞ் சூழ்ந்த சிவசித்தாய்
விசித்ரமாய்த் திரமாகி நானாவிதப்
பொருளாகி யப்பொருளையறி பொறியுமாகி யைம்புலனு
மாயைம் பூதமாய்ப் புறமுமாயகமுமாய்த் தூரஞ்சமீப
மாய்ப் போக்கொடு வரத்துமாகி
யிருளாகி யொளியாகி நன்மை தீமையுமாகி யின்றாகி
நாளையாகி யென்றுமாயொன்றுமாய்ப் பலவுமா யாவு
மாயிவையல்லவாய நின்னை
யருளாகி நின்றவர்களறிவதல்லா லொருவரறிவதற் கெளி
தாகுமோ அண்டபகிரண்டமு மடங்கவொரு நிறை
வாகி யானந்தமானபரமே! தாயுமானவர்.

தன்னை யொருவர்க்கறிவரிதாய்த்தானே தானா யெங்குநிறைந்
துன்னற்கரிய பரவெளியா யுலவாவமுதா யொளி விளக்கா
யென்னுட்கலந்தா யானறியா திருந்தாயிறைவா வினியேனு,
நின்னைப்பெறுமாறெனக் கருளானிலையைக் கொடுக்க நினை
யாயோ? தாயுமானவர்.

ஆரம்பத்தில் நாம்செல்வமுதலிய பொருட்களை யடைந்தோ மெனுமுயர்ச்சியில் அவனைக்கண்டு களிக்கிறோம். ஆதிகாலங்களில் நாகரீகமற்ற வனவாசிகளாய் நாமிருந்தபொழுது எப்பொருளையுங் கண்டவுடன் அதைக்கிரஹித்து நமதாக்கிக்கொள்ளவிலேயே நமதுமுழு நாட்டமு நின்று வந்தது. நமதென்ற ஆயுதம், நாம் போரிட்டுச் சத்துருவினிடமிருந்து வெற்றிபெற்றடைந்த அடையாளங்கள், நமது பலத்தால் அடக்கி அடிமையாக்கிய மானிடன் அல்லது மிருகம் ஆகுமிவை நமக்குக் கிட்டியதால் அந்நாட்களில் நாம் நமதுவாழ்விற் பெருங்களிப்பெய்தியதும் உண்மையன்றோ! இச்சமயங்களிலெல்லாம் பிறரது க்ஷேமலாப வுரிமைகளைச் சிறிதுங் கருதினோமன்று; பின்னை நமது காரியங்கள், விருப்பங்கள் நிறைவேறுதலே நமது வாழ்வாய் நிகழ்ந்தது. சந்தோஷமும் வீரியமு நமக்கு வருதற்கு வழியெல்லாம் நாம் பிறரையடக்கி நமக்குவசப்படுத்திக்கொள்ளலாலேயேயன்றிவேறல்லாமலிருந்தது. நமதிஷ்டமும் திருப்தியும் கைகூடிவிடின் பிறர் காரியங்கள் எக்கேடுறினும் நமக்குக் கவலையைச் சிறிதும் விளைவித்ததில்லை.

இவ்வாறு நாமானந்தமடைந்து காலங்கழித்து வந்தபொழுதெல்லாம் கடவுளே யுண்ணின்று அவ்வனுபவங்களை நமக்குஊட்டுவித்த உண்மையை நாமறிந்தோமில்லை. ஏனெனில் நாமிவ்வண்ணம் அவ்வஸ்துக்களைப் பெற்றனுபவித்தபொழுது அவைகளும் நம்மை ஆகர்ஷித்து வசப்படுத்திக்கொண்டு வந்தனவன்றோ! எவ்வளவிற்கு அவற்றில் நாம் விருப்பங்கொண்டோமோ அவ்வளவிற்கு அவையாவும் நம்மையும் பலமாய் கிரஹித்துக் கட்டுப்படுத்தி வந்திருக்கின்றன. அத்தருணங்களில் நாம் அவற்றின்மீது விருப்பத்தால் கட்டுண்டு சுவாதீன மிழந்தவர்களேயாகிப் பின்னர் அவ்வஸ்துக்கள் நம்மை விட்டப்பால் அகற்றப்பட்டப்பொழுது அவற்றின் நீக்கத்தால் மிகுந்த துன்பத்தையுமடைந்தோம். (1)

(1) சூட்டியேன தென்றிடுஞ் சுமையைச் சுமத்தியெனையுஞ் சுமையாளாக்

இன்னு மிச்சமங்களில் நமக்கு விசேட இன்பமு[illegible]மும் ஈந்துவந்தவை நமது குரூரங்காமம் அகந்தயாதிகுணங்களே. பிறரிடம் கொடுமை காட்டி அவரையடக்கி நமதிச்சையின்படி நடக்கச்செய்தலும், எப்பொழுதாவது அவர் நமக்கு வசப்படாது எதிர்த்தால் உடனே யவரையடக்கி நசுக்கிவிடலும், நமக்கு ஒருகாலத்தில் உண்மையான வாழ்வாயிருந்தது. ஆயினும் யிச்செயல்களால் நமக்கிடைவிடாது துன்பமும் விளைந்துவந்தது. இஃதெவ்விதமெனில் கூறுவாம். பிறனொருவனை நமக்குக் கீழ்ப்படியச் செய்தோமாயினும் அவனது இச்சையையும் அவ்விதம் அடக்கி யடிமைப்படுத்தி விடல் கூடாதாயிற்று. நாமடிமைப்படுத்திய வொருமனிதன், அவன் மீது நாம் கண்ணோட்டம் வைத்து அடக்கிவந்த காலத்தில் மட்டும், நமக்குக்கட்டுப்பட் டிருந்தனனேயன்றி, மற்றவேளைகளிலெல்லாம் அவனதிச்சை நமக்கு வசப்படாமலே சுயாதீனமாய் வியவஹரித்து வந்தது. பிறரால் தடையுறுந்தோறு மிவ்வண்ணமே யடங்கி அப்பால் தன் சுயாதீனத்தை வெளிப்படுத்திக்கொள்ளும் ஓர் அற்புத வியற்கையுடையதுவாய் இது விளங்கிற்றன்றோ! அன்றியும் நமக்கு இவனடிமைப்பட்டுக் கிடந்ததுபோலவே, அவனைக் கட்டிக்காத்து அடக்கிவருந் தொழிலிலாழ்ந்து அக்கடமையைத் தாங்கினவர்களாகி, அவ்வடிமைக்கு நாமும் ஓர்விதத்தில் அடிமையேயாயினோம். ஏனெனில் நமதிஷ்டப்படி நாம் திரிந்தலைந்து வரமுடியாதபடி மேலேகூறிய கடமைகள் நம்மைக் கட்டுப்படுத்தினவன்றோ! நம் விருப்பத்திற்கு விரோதமாய் நமது அடிமை தன் சுயாதீனத்தைக்காட்டி வருவதைக் கண்டால், நமக்கு அடங்காத் துக்கமுண்டாகி நம்நினைவுகள் நம்மை மிகவுந் துன்புறுத்தினவன்றோ? இவ்வாறாய வியவகாரங்களில் நாம் விரும்பிய விருப்பங்களையெல்லாம் இரவும் பகலும் வேறு யாரோவொரு புருடன் ஆக்ஷேபித்துத் தருக்கித்து நம்மொடு

கூட்டிப்பிடித்து வினைவழியே கூத்தாட்டினையே வினைதருளால்
வீட்டைக் கருதுமப்போது வெளியாமுலகை வியப்பனைத்து
மேட்டுக்கடங்காய்ச் சொப்பனம்போ லெந்தாயிருந்தவென்
சொல்வேன். தாயுமானவர்.



போட்டி போட்டுக்கொண்டே நிற்பதுபோலிருக்கின்றது. இவன்தான் மேலேகூறிப் போந்த மகாநண்பன் எனப்படுவோன் அவனே சதாகாலமும் நம்மொடு வாதித்து நம்மிச்சைக்கு மாறுசெய்தே வருபவனாகிறான்.

இவ்விதமே காம உணர்ச்சியால் நமக்கு வாழ்வில் விசேட ஆக்கமும் உண்டாகியது. நமது சரீரத்தோடு முழுவது மிணங்கி அதன் ஆசைகளையே நமதாசைகளாகக்கொண்டாடுதலும், அதன் விருப்பங்களை நமது இச்சையால் ஒன்றுக்குப் பத்தாய் அதிகரிக்கச் செய்தலும், பிரதியிந்திரிய துவாரத்தின் வழியாகவும் நமது காமம் வேகமாய் வழிகாட்டிச்செல்ல அதன்பிறகே யோடிச்சென்றுழலுதலும், இவையெல்லாம் ஓர் காலத்தில் நமது வாழ்வின் பிரகாரங்களாயின. ஆயினுமித்தருணங்களிலும் அப்பொழுதுக்கப்பொழுதே இவ்வனுபவங்கள் கெடுதற் பயன்களைத்தந்து துன்பமளித்தன. எப்படியெனில் நமது தேகம் அபேக்ஷிக்கும் இன்பங்கள் யாவற்றையு மனுபவிக்க முயலுதலாவது கொழுந்துவிட்டெரியும் அக்கினியில், அதையணைத்துவிட முயலுவான் அதை விருத்திசெய்யும் எண்ணெய் நெய்யாதிகளைப்பெய்துவரலொக்குமன்றோ! இவ்வாறு சகல சாதனங்களையும் நாம் அடைந்திருந்த பொழுதும் நமது காமப்பேய் திருப்தியடைந்துவிடாமல் முடிவில், தன் சொரூபத்தைமாற்றி ஆசைகளின் வடிவாகியது. இவ்வாசைகளும் நம்மை மென்மேலிழுத்துக்கொண்டே சென்றுவந்தன. இவ்வாறு நாம் பலவிதங்களில் நமது ஆசையை நிறைவேற்றிக்கொள்ள முயன்றாலும் இவ்வாசைக்கு ஏதுவாய் பொருளை நிச்சயமாய் நாம் சம்பாதித்துவிட்டோமென்பதில்லை. ஒரு தடவை நாம் ஆசைக்கு விஷயமான பொருளை அடைந்துவிட்டால், உடனே சிறிதுகாலஞ் சென்றபின் அப்பொருளும்கேவலம் வஸ்துவற்றதோர்வெறுந் தோற்றமாகி நமக்கு வெறுப்பைத் தருவதாகின்றது. அப்பால் ஆசையும் நம்மை யோர் மாயாவடிவம்போல் எங்கேயோ அழைத்துச்செல்கின்றது. ஆகலின் காமானுபவத்தினின்றும் ஆசையின் வசமாகியும், பின்னர் ஆசையினின்றும் அன்

பிற்குச்சென்றும், அப்பால் அன்னையுந்தாண்டி, அடைய முடியாததோர் பெரும் பொருளை நாடிச்செல்லும்படிக்கும், சகலமானிடரையும் வாழ்வெனும் அவர்களது அந்தரங்க வியற்கை தூண்டிச்செல்கின்றது. இங்குண்மையில் இவ் வியற்கையாவது உண்ணின்று சகலரையும் நடத்திவிப்போனாகிய மேலே காட்டிய பரம நண்பனும் மூர்த்தியே. (1)

P. R. ஸுந்தரராஜய்யர்

(இன்னும் வரும்.)

---

# "ஜகத்குரு"வின் வருகை.

## பிரமஞான சங்கத்தாரின் கொள்கைகள்.

---

பம்பாயில் வெளியாகும் "இந்தியன் டெயிலி மெயில்" என்னும் பத்திரிகையில் மேற்கண்ட விஷயமாக வெளியான கட்டுரை நேயர்களுக்குச் சுவையளிக்குமென எண்ணி அதன் சாராம்சத்தை மொழிபெயர்த்து வெளியிடுகிறோம்:— ஜகத்குருவின் வருகையைப்பற்றி டாக்டர் அன்னி பெசண்ட் அம்மையார் சமீபத்தில் வெளியிட்டிருக்கும் விஷயங்கள் ஐரோப்பாவில் பலருடைய கவனத்தைக் கவர்ந்திருக்கின்றன. ஐரோப்பாவில் பலர் இக்கொள்கைகளைப்பற்றிக் கேலிசெய்வதுபோலவே, இந்தியாவிலும் அம்மையாரை நகையாடுவோர் பலர் இருக்கலாம். சென்ற பத்துப் பன்னிரண்டு வருஷகாலத்திற்கு மேலாகவே டாக்டர் பெசண்டு 'ஜகத்குரு' ஒருவர் வரப்போகிறார் என்று சொல்லி வருகிறாராயினும், இப்போது அவர் அதைப்பற்றிய நுட்பமான விவரங்கள் பலவற்றையும் வெளியிட்டு உலகத்தைப் பிரமிக்கச் செய்திருக்கிறார். இதன் பொருட்டுப் பலர் அவரை எதிர்ப்பார்கள் என்பதில் ஐயமில்லை. டாக்டர் பெசண்டின் நோக்கங்களில் ஒன்று இவ்வாறு எதிர்ப்பைக் கிளப்பிவிடுவதே என்பதுதான் இதில் விநோதமான அம்சம். ஜகத்குரு வருவதற்கு முன்னால், அவ்வெண்ணத்தை உலகில் பரப்பி, கூடிய வரையில் அவர் வரும்போது எதிர்ப்பு இல்லாமல் செய்ய விரும்புவதாகவும், இதற்காக அவர்மீது விழக்கூடிய எதிர்ப்பில் ஒரு பகுதியைத் தாங்கள் ஏற்றுக்கொள்வதாகவும் அம்மையார் கூறுகிறார்! ஜகத்குருவின் வருகையைப்பற்றி அவர் கூறும் விவரங்களின் சாராம்சத்தை இங்கே தருகிறோம்.

நமது பூமியில் ஜீவகோடிகளின் வளர்ச்சியைப் பூரணத்வம் பெற்ற மகாத்மாக்கள் சிலர் கவனித்துக்கொண்டு நடத்தி வருகிறார்கள். இவர்களில் அநேகமாக எல்லாரும் மனிதர்களாயிருந்து தங்கள் முயற்சியால் பூரணத்வம் பெற்றவர்களே. சாதாரண மனிதர்களிடை காணப்படாத சுயநலமற்ற தன்மையும், ஞானமும், சக்தியும் இவர்களுக்குண்டு. அவர்கள் சட உடலந் தாங்கியவர்களே யானாலும், உலகில் சாதாரண ஜனங்கள் போகக்கூடாத அந்தரங்கமான இடங்களில் அவர்கள் வசிக்கிறார்கள். இத்தகைய மகாத்மாக்களின் தொகை நாளுக்குநாள் அதிகமாகி வருகிறது. ஏனெனில் அவர்களை அடையும் வழி எப்போதும் திறந்திருக்கிறது. எவன் தனது வாழ்க்கை முறையினால் அவர்களிடமிருந்து ஞான சக்தியைப்பெற்று உலகத்தின் ஊழியத்துக்காகவே வாழ விரும்புவதாகத் தெரிவிக்கிறானோ, அப்படிப்பட்டவனை அவர்கள் தங்களிடத்தில் சேர்த்துக்கொள்கிறார். இந்த மகாத்மாக்களின் கூட்டத்தில் பல படித்தரங்கள் உண்டு. எல்லாருக்கும் மேற்பட்டவர் அரசர். இவர்தான் உலகின்

---

(1) நடத்திவிவ் வுலகையெல்லா நாதாநீ நிறைந்த தன்மை,
திடத்துட னறிந் தானந்தத் தெள்ள முதருந்திடாதே,
யிடத்திளையை காமவேட்கையி லழுந்தி மாயைச்
சடத்தினைமெய்யென் றெண்ணித்தளரவோ தனியனேனே!
வாழ்வென வயங்கியென்னை வசஞ்செய்து மருட்டும்பாழ்த்த
சூழ்வினைப்பகுதி கெட்டிங்குன்னையுங் கிட்டுவேனோ
தாழ்வெனுஞ் சமயநீக்கித் தமையுணர்ந்தோர் கட்கெல்லாஞ்
சூழ்வெளிப்பொருளை முக்கட்சோதியே யமரரேறே.

தாயுமானவர்.

இறைவர். கடைசிபடியிலுள்ளவர்கள் அப்போதுதான் சீடர் நிலையிலிருந்து மேல் வந்தவர்கள். மற்ற மனிதர்களுடைய வாழ்க்கைக்கும் இவர்களுடைய வாழ்க்கைக்கும் வேற்றுமை வெளிப்படத் தெரியாது. ஆனால் இவர்கள் மற்றவர்களைப்போலன்றித் தமக்கென வாழாமல் பரோபகாரத்துக்காகவே வாழ்வோர். அரசருக்கும் இவர்களுக்குமிடையே பல படித்தரங்கள் உண்டு. இவற்றுள் அரசருக்கு அடுத்தபடியில் வருபவர்தான் ஜகத்குரு. வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு சாதியாருக்கிடையே, பல வடிவங்கொண்டுவந்து நித்தியமான உண்மைப்பொருளை உபதேசித்துச் செல்பவர் இவரே. அந்தந்தக் காலத்தில் இவருக்குப் பின்னால் வரும் சீடர்களின் மனோநிலை காரணமாக அவருடைய உபதேசங்கள் பலவாறாகத் திரிக்கப்பட்டுப் போகின்றன. ஆயினும் சத்தியம் ஒன்றுதான். ஆசாரியரும் ஒருவரே. ஹிந்துவின் கிருஷ்ண பரமாத்மாவும், மேனாட்டின் கிறிஸ்துநாதரும், பௌத்தர்களின் மைத்ரேயரும் ஒருவரே யாவர். அவர்தான் அருளே உருவான ஜகத்குரு.

இந்த மகாத்மாக்களின் கூட்டத்தில் தாமும் சேர்ந்தவர் என்று பெசண்டம்மையார் சொல்லிக்கொள்கிறார். இக்கூட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு, அவரவர்களின் படித்தரத்துக்குத் தகுந்தாற்போல் இறந்த காலத்தைப்பற்றியும், வருங்காலத்தைப்பற்றியும் பல உண்மைகள் வெளியிடப்படும். மேலும் இப்புவியின் முன்னேற்றத்துக்கான பெரிய வேலைத் திட்டத்தில் அவரவர்களின் சக்திக்குத் தகுந்தாற்போல் வேலை பிரித்துக் கொடுக்கப்படும்.

டாக்டர் பெசண்டு அரசியல் வேலையை மேற்கொண்டது இதற்கு ஓர் உதாரணமாகும். சில வருஷங்களுக்கு முன்பு இத்தேசத்தின் அரசியல் முன்னேற்றத்துக்காக உழைக்கும்படி அவருக்குக் கட்டளையிடப்பட்டது. ஆனால் அவருடைய திவ்யஞான சங்கத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான ஐரோப்பியர் அவர் அரசியல் வேலையில் ஈடுபடுவதை விரும்பவில்லை. பலர் இதுகாரணமாக மேற்படி சங்கத்தை



விட்டே போய்விட்டனர். ஆயினும் அம்மையார் இவைகளால் கலக்கமடையாமல் அரசியல் வேலையில் ஈடுபட்டு உழைத்துவந்தார். பின்னர் இந்தியாவில் அவருடைய செல்வாக்கு இணையற்றதா யிருந்தகாலத்தில் ஒத்துழையாமை இயக்கம் தோன்றிற்று. அவ்வியக்கம் வெற்றியடைந்தால் இந்தியா பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்திலிருந்து பிரிய நேரிடுமென்றும், இது உலகநன்மைக்கு உகந்த தாகாதென்றும் அவருக்கு அறிவிக்கப்பட்டது. ஒத்துழையாமையை எதிர்க்க வேண்டுமென்று அவருக்குக் கட்டளை யிடப்பட்டது. அவர் அக்கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார். அதன் பலன் என்னவென்பது எல்லாருக்கும் தெரியும். பொது ஜனங்களால் போற்றப்பட்டு தெருக்களில் ஊர்வலம் விடப்பட்டு ஒவ்வொரு ஸ்டேஷனிலும் மாலை போடப்பட்டு, பதினாயிரக் கணக்கான ஜனங்களால் வரவேற்றுக் கொண்டாடப்பட்ட இம்மூதாட்டியார் அவ்வளவுக் கவ்வளவு பொது ஜனங்களின் வெறுப்புக்குப் பாத்திரமானார். இக்காலத்தில் அவர் காட்டிய மன உறுதியின் பெருமையைக் கூட இருந்து பார்த்தவரே அறிய முடியும். அவருடைய வாயினின்று வெளிவந்த ஒவ்வொரு மொழியையும் பொன்னேபோல் போற்றிவந்த இந்தியர் மேடையில் அவரைப் பேசவிடாமல் செய்தார்கள்; தெருக்களிலே கூச்சல்போட்டு விரட்டினார்கள்; அவமானப் படுத்தினார்கள்; பரிகசித்தார்கள். அவருடைய முதுமைப் பருவமும் அவருடையபழைய ஊழியங்களுங்கூடமறந்துவிடப்பட்டன. ஆயினும் அவர் நம்பிக்கை யிழக்கவில்லை. மற்றவர்கள் நின்றபோதும் அவர் வேலை செய்துகொண்டே போனார். இன்றையதினம் அவருடைய 79-வது வயதில் இன்னமும் இடைவிடாமல் அவர் வேலை செய்துகொண்டே யிருக்கிறார். எந்தத் தியாகமும் அவருக்குப் பெரிதில்லை. எத்தனைப் பெரிய கஷ்டத்துக்கும் அஞ்சுவதில்லை. எவ்வளவு பெரிய முயற்சியும் அசாத்தியமில்லை. எவ்வளவு பிரமாண்டமான தோல்விக்கும் சோர்ந்துவிடுவதில்லை. எவ்வளவு கடுமையான சோதனைக்கும் தயங்குவதில்லை. ஏன்?

இப்போது மீண்டும், சில விஷயங்களை வெளியிடும்படி தமக்குக் கட்டளை பிறந்திருப்பதாகவும், அவை தமது சீடர்களுக்குப் பிடித்தாலும், பிடியாவிட்டாலும், உலகத்தார் ஆதரித்தாலும், நகைத்துக் கேலிசெய்தாலும் அவற்றை வெளியிடுவது தமது கடமையென்றும் சொல்லுகிறார். மற்றொரு பெரிய மகா யுத்தம் சமீபத்தில் ஏற்படுவதற்கிருக்கிறதென்றும், இதைச் சரியான தருணத்தில் தடை செய்யாவிட்டால் நாகரிக உலகமே நாசமாகி விடுமென்றும், இதைத் தடுப்பதற்காகவே ஜகத்குரு, தாம் முன்னால் எதிர்பார்த்ததைவிட விரைவாக வரப்போகிறாரென்றும் அவர் சொல்கிறார். ஜகத்குரு குழந்தையாகவே இவ்வுலகில் பிறந்து வளர்வது மிகவும் அருமை. ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவாக அவர் வந்தபோதுமட்டும் குழந்தையாகவே பிறந்தார். ஆனால் 2000 வருஷத்துக்கு முன் பாலஸ்தீனத்தில் அவதரித்தபோது குழந்தையாகவே பிறக்கவில்லை. குழந்தையாகப் பிறந்தது ஏசு என்னும் சீடர். இவருடைய ஞானஸ்நான காலத்தில் ஜகத்குரு வெள்ளைப் புறாவடிவமாக வந்து இவருடைய உடலைத் தமக்கு இருப்பிடமாகக் கொண்டார். இந்த அவதாரமும் அப்படித்தான் நேரும். இம்முறை ஜகத்குரு வந்து ஆட்கொள்வதற்காகத் தயார்செய்து வைக்கப்பட்டிருப்பவர் ஸ்ரீமான் ஜே. கிருஷ்ணமூர்த்தி என்னும் இளைஞர். இவர் குழந்தைப் பருவத்திலிருந்தே இந்நோக்கத்துடன் வளர்க்கப்பட்டு வந்திருக்கிறார். ஜகத்குரு தமக்குரிய பன்னிரண்டு சீடர்களைத் தெரிந்தெடுத்துக்கொண்டதாகவும் பெசண்டம்மையார் கூறுகிறார். டாக்டர் பெசண்டு, பிஷப் லெட்பீடர், ஸ்ரீமான் ஜீனராஜதாஸர், ஸ்ரீமான் அரண்டேல் அவருடைய மனைவியார் ஆகிய இவர்கள் மேற்கண்ட பன்னிரு சீடர்களில் சேர்ந்தவர்கள். ஜகத்குரு இவ்வுலகில் செய்யப்போகும் வேலைகளில் முக்கியமானது உலகமதம் ஒன்றை ஸ்தாபிப்பதேயாகும். சத்தியப் பொருள் ஒன்றே என்பதை அங்கீகரித்து, மற்றவர்களுடைய சமயக் கோட்பாடுகளைச் சமநோக்குடன் பார்ப்போர் அனைவரும் இந்த மதத்தைச் சேர்ந்தவர்களாயிருப்பார்கள்.



இந்தப் புது மதத்தைப் பரவச் செய்வதற்காக அவர் தற்போதுள்ள ஸ்தாபனங்களுள் பிரமஞான சங்கம் என்னும் தியஸாபிகல் ஸொஸைடி, கோ மாஸானிக் ஆர்டர், லிபரல் காதலிக் சர்ச் என்னும் மூன்றையும் உபயோகித்துக்கொள்வார். சர்வ தேசங்களுக்கும் பொதுவான கல்வி ஸ்தாபனம் ஒன்றையும் அவர் ஏற்படுத்துவார். ஆஸ்திரேலியாவில் ஸிட்னியும், இந்தியாவில் அடையாறும், ஹாலந்தில் ஹாய்சென் என்னும் நகரமும் இந்தக் கல்வி ஸ்தாபனத்துக்குத் தலைமை ஸ்தானங்களாயிருக்கும்.

ஏன்? இந்த இருபதாம் நூற்றாண்டில் இத்தகைய கொள்கைகள் மிகவும் ஆச்சரியம் அளிக்கத்தக்கனவல்லவா? ஆனால் ஒருவேளை இவை உண்மையாயிருந்தாலோ?

(நவசக்தி.)

* ஸ்ரீமான் ஸி. ஜினராஜதாஸரவர்களிடமிருந்து கிடைத்த செய்தி. *

# ஸர்வமானிட ஸமூகமே ஸகோதர பூமியாகும்.

ஜகத்தின் பரிபாக மார்க்கமேயாகும் கடவுளின் ஏற்பாட்டில், மானிடன் தனது அற்பசுபாவமாகும் அதம இயற்

* இஃது, நமது பிரமஞான மகாசங்கத்தின் உப அக்ராசனாதிபதியான ஸ்ரீமான் ஸி. ஜினராஜதாசர் எம். ஏ. அவர்களால், அவரது 50-வது வருஷ பூர்த்தி தினத்தன்று, அந்தப்புண்ணிய தினத்தைக் கொண்டாடுவதற்காக அடையாற்றில் கூடியிருந்த பிரம்மஞானஸபை மெம்பர்களுக்கு அளித்தருளிய செய்தி. ஸகோதரர் P. R. ஸுந்தரராஜய்யரவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

ஷையினின்றும், தனது உத்தம ஆன்ம சுபாவத்தை அடையும்படி நாளடைவில் பழக்கப்படுத்தப்பட்டு வருகிறான். முதலில் தனது குடும்பத்தோடு தன்னை ஒன்றுபடுத்திக் கொள்ளவும், அப்பால் அநேக ஜன்மங்கள் கழிந்தபின்னர், தனது வகுப்பு, ஜாதி இவைகளின் லாபங்களைத் தனது லாபமாகக் கருதும் இயற்கையடைகிறான். பிறகு தனது தேசமுழுமையுமாய் விளங்கும் கடவுளின் அம்சத்திற்கே தன்னை அற்பணம் பண்ணிக்கொள்ளும்படி அவன் செய்விக்கப்படுகிறான். இப்பொழுது தனது தேசம் முழுமைக்காகவே காலங்கழிப்பதும், அதற்காபத்துவரின் அதை நீக்குவதற்காகத் தன் உயிரையே கொடுப்பதும், எவ்வளவு பெருமையும் மஹிமையும் உடையது என இவன் அறிந்து கொள்ளுகிறான்.

இனியாவற்றினும் மேலாயதனது உத்தம ஆன்ம ஸ்வரூபத்திற்கு, மேற்கூறிய மானிடன் செல்லவேண்டுமாயின், இவன் இப்பொழுது அடைந்திருக்கும் தனது தேசமுழுமையோடும் தான் ஐக்கியப்பட்டிருக்கும் இந்த நிலையைக்காட்டிலும் இன்னும் உயர்ந்ததானபடியும் ஒன்றுண்டு. அது தான் நமது பிரமஞான மகாசங்கத்தில் இவன் வந்துசேரும் பொழுது இவனுக்கு வாய்க்கும் பதவியாகும். மானிடனுடைய ஜீவன், இதற்குமுன் அநேக ஜன்மங்களில் பிறந்து வாழ்ந்த பொழுதெல்லாம், தனது ஆன்மசுபாவத்தை அடைவற்கு வேண்டிய அனுபவங்களை அனுபவித்துணருதற்காக உதவிய மாதுர் பூமிகளும் பிதுர் பூமிகளும் எண்ணிறந்தனவாகின. ஆயினும் இவைகளிலெல்லாம் வசித்தபிறகு, முடிவாகிய தனது உத்தேசஸ்தானத்திற்கு இவன் வந்துசேரவேண்டிய ஸ்தலமாகிய ஸகோதரபூமியெனும் பிரதேசமும் ஒன்றுண்டு அதுதான் இந்த நமது பிரமஞான மகாசபையென்பது, அல்லதுஇதைப்போன்ற சுபாவமுடைய வேறுசபையாகும். ஏனெனில், இந்த சபையில் முக்கியமான உத்தேசமாவது, அகில உலகம் மேன்மையடைய வேண்டியது ஒன்றேதவிர, இவன், அவன், அல்லது இத்தேசம், அத்தேசம் என்பனவாய தனி வஸ்துக்களின் அபிவிருத்திமட்டும் பயன்படாது என்பதே.



ஆதலின், இவ்வுயர் நோக்கமுடைய நமது பிரமஞான மகாசங்கத்தில் வந்துசேருவோர் யாவரும் மிகவும் உயர்பாக்கிய சாலிகளன்றோ! ஏனெனில், இம்மகாசபையின் அங்கத்தினர் யாவரும் சகலமானிட சமூகமும் பூர்ணமாகிய சகோதரத்வம் விளங்கும் பூமியெனவும், அதனால் தத்தமது மாதுர் பூமி, பிதுர்பூமி என்பனவாய பூர்வஜன்மங்களின் பற்றுக்களை ஒழித்து, சகலதேசங்களும் அடங்கிய மானிடவர்க்க முழுமையுமே நமது ஸகோதரர்களெனக்கருதி, அதுவே மேலான ஸகோதரபூமி என்னும் நாட்டத்தை அடைகின்றனர்.

16—12—1925 ஸி. ஜினராஜதாஸர்.

---

# மஹரிஷி ஒருவர் திவ்யஞான சபையோருக்கு எழுதியசெய்தி.

1925—௵ ஜுபிலி கூட்டத்தில் படிக்கப்பட்டது.

**சகோதரர்களே:—**

உங்களுடைய பெரிய சபா நாயகரிடமிருந்து சென்ற சில வாரங்களாக கேட்டதிலிருந்து, 50—வருஷகால அங்கியத்தில் திவ்யஞானசபையின் வேலை, இதுவரையிலும் பெற்ற பெரும்பேரைவிட விசேஷமாகவும் சிறப்பாகவும் லோககைங்கரியத்தில் தலையிடப்போகிறதென்று நாங்கள் சொல்லுவதும் அதிகமல்ல, நீங்கள் ஒப்புக்கொள்ளுவதும் அதிகமல்ல.

இச்சபை ஆரம்பமாகிய இம்முதல் அரைநூற்றாண்டில், சூக்ஷ்மலோக வாழ்வின் நிச்சயத்தையும், ஆன்ம விருத்தியின் அடிப்படையான உண்மைகளையும் எடுத்து ருசு செய்து, உலகமுழுதும் சகோதரபாவத்தை உலகெங்கும் முரசறைந்தது.

இன்னும் விசேஷமான இரண்டாவது [illegible] இருக்கிறது இதற்குமுன் ஒரு கூட்டத்தாரும் செய்யாத பெரும் காரியங்களைச்செய்ய உங்களுக்கு சக்தியுண்டு. நாங்கள் உங்களுக்குச் சொல்லுவது: வரும் ஐம்பது வருஷத்தில் சகோதர பாவம் உலகத்தில் நிலைத்து நடைபெறும் காரியமாக நீங்கள் செய்யமுடியும்.

* * * *

சிறு குழந்தைகளிடத்து மிருதுவாக நடந்து ஒழுகுங்கள்; அவ்விதமே, ஞான அறிவு கொஞ்சமும் இல்லாமல், பாபம் செய்பவர்களிடம் இன்னும் தயையுடன் நடக்கவேண்டும். மிருகங்களிடம் இன்னும் அதிக தயையுடன் பழகவேண்டும்; ஏனெனில் அவைகள் வெறுப்பினால் மனுஷ ஜன்மத்தை யடையாதபடி அன்பினால் அடையும்படி செய்வது நல்லது. அவ்விதமே புஷ்பங்களையும், செடிகளையும் போற்றுங்கள். நீங்களெல்லோரும் ஒரே இரத்தபாத்தியமாகவும், ஒரே மூலத்தையும் ஒரே முடிவையும் கைக்கொண்டவர்களாகவும் இருக்கவேண்டும், இந்த உண்மையை உணர்ந்து உயிர்வாழவேண்டும்.

* * * *

எங்களை வேண்டாதவர்களிடம் நாங்கள் போய் வலிவு செய்வதில்லை ஆயினும் உலகத்திற்கு நாங்கள் வேண்டியிருக்கிறது. உலகத்தார் எங்களைப்பரிந்து விரும்புவார்களானால், நாங்கள் தாராளமாக அவர்களுக்கு உதவிபுரியக்கூடும். ஈசுவர கட்டளைப்படி, எங்கள் புண்ணியப்பிரபு உங்களுக்கு இடையில் வருகிறார். அது உங்களுக்கு இஷ்டமானாலும் இஷ்டமில்லாவிட்டாலும் சரி. ஆனால் அவர்கூட வரவேற்புக்குமேல் அதிகநாள் இரார். நீண்டகாலங்களுக்கு ஒருதரந்தான் அவர் உங்களிடையில் அவதரிக்க, அவர் சந்நிதியில் மதிப்புரைக்கமுடியாத அநுக்கிரகத்தை அடைதல் கூடும். நாம் காத்திருக்கவேண்டும். அப்படியே ஆகட்டும். ஆயினும் அவருக்கு நீங்கள் நல்வரவுகூறி, ஒருவேளை நீங்கள் போற்றினீர்களானால், அவர் உங்களோடு அதிகநாள் வாழக்கூடும். அவ்விதமாக எங்கள் லோகத்துக்கும் உங்கள் லோகத்துக்கும் கதவு திறக்கப்படும். மற்ற லோகங்களுக்கும் உங்கள் லோகத்துக்கும் வழியுண்டாகும். எல்லாம்



ஒரே லோகமாகும். இளைய ஜீவசகோதரர்களிடம் எங்கள் இயற்கையாக ஸ்தானத்தில் அமர்ந்து நாங்கள் ஒத்துநடக்க முடியும். தேவவர்க்கமும் மனுஷவர்க்கமும் மறுபடியும் கூடிக்குலவ ஒருவர்க்கொருவர் உதவிபுரியமுடியும்.

உங்களாலானவரை நன்மையும், சிறப்பும், சத்தியமும் ஜயிக்குமென்று நம்புங்கள். உண்மையில் அவை செழித்தோங்கும்.

கஷ்டத்தைக்கண்டு பயப்படாதீர்கள். நிலையில்லாத தோல்வியைக்கண்டு பின்வாங்காதீர்கள். நாங்கள் எப்படி உங்களிடம் திடநம்பிக்கையோடு இருக்கிறோமோ, அவ்விதமே நீங்களும் உங்களிடத்தில், உங்களுடைய சக்தியில் உறுதியாக நம்புங்கள். ஏனெனில் எங்களுடன் சம்பந்தமில்லாதவர்களாவது, எங்களுக்கு தேவையில்லாதவர்களாவது சபைச்சேர்ந்தவர்களில் ஒருவராவது இல்லை. எங்களுக்கு நீங்கள் தேவையாய் இருப்பதினால் நாங்கள் உங்கள் ஒவ்வொருவரையும் தெரிந்துபொறுக்கி எடுக்கவில்லையா? ஒருவர்க்கொருவர் நீங்கள் வேண்டியவர்களாக இருக்கிறீர்கள். எங்களுக்கு நீங்கள் எல்லோரும் வேண்டியிருக்கிறது. சத்தியத்துக்கும் சகோதர பாவத்துக்கும் தைரியமாய் நில்லுங்கள். வரும் யுகங்களுக்கு எல்லாம் நாங்கள் உங்களோடு இருக்கிறோம்.

சு. வி. க.

---

## ஸ்ரீ மைத்ரேயபகவான் மதுரமொழி.

[New India. 13—1—26.]

சென்ற டிசம்பர்-மீ 28உ காலை அடையார் ஆலமரத்தடியில் ஸ்ரீமான் ஜி. கிருஷ்ணமூர்த்தியார் உதயதிசை நக்ஷத்திர சங்கத்தோர்கள் மாத்திரம் சேர்ந்த சபைக்கு உபந்யாசம் செய்துகொண்டிருந்தார். லோக குருவைப்பற்றி, “முன்னின்று நம்மை நடத்த அவர் வருகிறார்; யார் தெரிந்தவர்களாகவும், கஷ்டப்பட்டவர்களாகவும், மனவருத்தமுடைய

வர்களாகவும், மனப்பிரகாசமடையாதவர்களாகவும் இருக்கின்றார்களோ அவர்களுக்காக வருகின்றார். யார் அவரைக்கோரி, விரும்பி, ஆசைப்படுகின்றார்களோ அவர்களுக்காகத்தான் வருகின்றார்.'' என்று சொல்லி முடிக்குங்கால்,

திடீரென்று பேச்சுமாறி, அவர் வாயிலிருந்து பின்வரும் ஆழ்ந்த அன்பான மதுர மொழிகள், *

"தயையைக் கோருகிறவர்களுக்கும், சுகத்தைக்கோருகிறவர்களுக்கும், கஷ்டத்தினின்றும் நீங்க விரும்புகிறவர்களுக்கும், சகலத்திலும் சுகத்தைக்காண ஆசைப்படுபவர்களுக்கும் நான் வருகிறேன். (உலகத்தை) சீர்திருத்தம் செய்வதற்காக வருகிறேனே தவிற ~~[illegible]~~ சின்னபின்னம் செய்வதற்காகவல்ல; அழிப்பதற்காக அல்ல, அமைப்பதற்காகவே வருகிறேன்.''

வெளிவந்தன. சபை சப்தமன்னியில் கலந்தது. டாக்டர் அன்னிபெசன்ட் அம்மையார், இதைப்பற்றி அசோஷியேடட் பிரசாருக்கு (Associated press) சொல்லியதில், லோககுருவானவர் ஸ்ரீமான் ஜி. கிருஷ்ண மூர்த்தியாரின் மூலமாக இவ்வார்த்தைகளை மொழிந்தாரெனக்கூறினர். உடலில் லோககுரு ஆவேசமாவாரென 1909வருஷ முதல்தான் அறிவேனெனவும், தனக்காகத்தயாரான இவ்வுடலை இனி வரவர அதிகமாக ஆட்கொள்ளுவரெனவும், ஆரிய மனுஷவர்க்கம் ஆரம்பித்தது முதல் இதுவரை 5 தடவை நிகழ்ந்த விதம் இப்போது புதியதொருயுகமும் புதியதொரு நாகரீகமும் உதயமாகிறதென்றும், அவ்வம்மையார் கூறினர். சு. வி. க.

---

* "I come for those who want sympathy, who want happiness, who are longing to be released, who are longing to find happiness in all things. I come to reform, not to tear down! not to destroy, but to Build."

# குறிப்புகளும் சமாச்சாரங்களும்.

பிப்ரவரி மூ 17உ பிரமஞான ஸபையாருக்கு ஓர் விசேஷமான புண்ய தினமாகும் 1907-ம் வருஷம் பிப்ரவரி மீ 17உ ஸ்ரீமான் கர்னல் ஆல்காட் என்னும் பெரியார் தன் சரீரத்தைவிட்டு வெளியேகினர். இப்புண்ணிய சீலர், 1875-ம் வருஷம் நவம்பர் மீ 17உ, மாதுஸ்ரீ ஹெலினாம்பாள் அம்மையாருடன் இவ்வுலகில் பிரம்மஞான ஸபையை ஸ்தாபித்தவர் அதுமுதல் தன்மரணபரியந்தம் தளராத உற்சாகத்துடன் தன் உடல் பொருள் ஆவி மூன்றையும் ஸபையின் உண்மைகர்த்தர்களான ஸ்ரீ குருநாதர்களுக்கு அர்ப்பணம் செய்து உழைத்தவர். தன் ஜீவியகால முழுவதும் ஸபையின் தலைவராயிருந்தார். இப்பெரியாரின் ஞாபகார்த்தமாக இந்தப்புண்ணிய தினத்தை பிரம்மஞானக் கிளைச்சங்கங்கள் உள்ள இடங்களிலெல்லாம் விசேஷ உற்சாகத்துடன் கொண்டாடுவார்கள்.

இதே தினத்தில், அதாவது, 1847ம் வருஷம் பிப்ரவரி மீ 17உ ஸ்ரீமான் C. W. லெட்பீடர் என்னும் ஞான சிரேஷ்டர் இப்புவியில் பிராகிருத ஜன்மம் எடுத்தார். இவர் ஞான சாஸ்திரங்களைக் கரைகண்டவர். இதுவரையில் எத்தனையோ ஞான நூல்களை வெளியிட்டிருக்கின்றனர். குப்த சாஸ்திரத்தில் நுண்ணிய ரஹஸ்யமான தத்துவங்களை யாவருக்கும் புலப்படும்படியாய்த் தெளிவாய்ச் சொல்லவல்லவர். இவர் திவ்ய திருஷ்டி பெற்ற சிறந்த அநுபவியாதலால் இவர் சொல்லும் வார்த்தைகளெல்லாம் ஸ்வாநுபவத்தில் நேரில் கண்டறிந்த உண்மைகளாகும். எப்பொழுதும் ஸந்துஷ்டி உள்ளவர். நமது அன்னையார், எப்படி நமது பிராசீன கிரந்தங்களிற் கூறப்பட்டுள்ள கர்மயோகீச்வரிய லக்ஷணங்களுக்கு உதாரணமாய் விளங்குகின்றாரோ, அப்படியே இவ்வுத்தமர், ஓர் ஞான யோகீச்வரிய ஸர்வ லக்ஷணங்களும் வாய்க்கப்பெற்றவர் என்று உலக பிரஸித்தி யடைந்தவர். இவரது நூல்களாலும் உபதேசங்களாலும் ஆயிரக்கணக்கான பேர்கள் மேன் மார்க்கத்தில் பிரவேசித்திருக்கின்றனர். இந்த தினத்தையும் ஸபை 'மெம்பர்கள் வெகுசிறப்பாய்க் கொண்டாடுவார்கள். இப்பெரியார் ஸமீபத்தில் 75 பேர்களுடன் ஆஸ்ட்ரேலியாவிலிருந்து ஜூபிலி கன்வென்ஷனுக்கு அடையார்வந்து நம்மி லனேகருக்கு தரிசனமளித்து சென்ற ஜனவரி மீ 28உ ஆஸ்ட்ரேலியாவுக்குத் திரும்பினர். அங்கு அவர் அபாரமான ஊழியம்புரிந்து வருகின்றார். இப் பெரியார் தீர்க்ககாலம் நம் மத்தியில் ஸுகமாய் வாழ்ந்து அதிக மதிகமான உற்சாகத்

துடன் தன் ஞான கைங்கரியத்தைப் புரிந்துவர ஸர்வ வல்லமையும் படைத்த மஹான்கள் அநுக்ரஹிப்பார்களென்று பிரார்த்திக்கின்றோம்.

இதே தினத்தை அடையார் தினம் என்று இவ்வுலகில் பிரம்மஞான ஸபைகளுள் பல விடங்களில் வைத்துக்கொண்டு, மெம்பர்கள் அடையாற்றில் நடக்கும் காரியங்களுக்கென்று தங்கள் தங்களா லியன்ற பொருள்களைச் சேர்த்து அனுப்பி வருகிறார்கள்.

---

அருமையான

# சில தமிழ்ப் புத்தகங்கள்.

**ஸநாதன தருமம்--மேற்பாடபுஸ்தகம் :—**

காசியில் மத்திய இந்து காலேஜில் இந்து மத போதனைக்காக எழுதிய ஆங்கில நூலின் மொழி பெயர்ப்பு. இது இந்துமத தத்வங்கள் ஆசாரங்கள் நீதி முறைகள் இவைகளைத் தகுந்த ஆதாரங்களுடன் எடுத்து விளக்குகின்றது. விலை ரூ 1—8—0.

**யோக சூத்திரம்—(குறிப்புரைகளுடன்):—**

பகவான் பதஞ்சலி மஹரிஷி அருளிச்செய்த ஸமஸ்கிருத நூலின் மொழிபெயர்ப்பு. இரண்டாம் பதிப்பு. விலைரூ 0—12—0

**கல்வி கற்பித்தல் ஒரு கைங்கரியம்:—**

ஸ்ரீமான் ஜி. கிருஷ்ணமூர்த்தி அவர்களது ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. உபாத்யாயர்கள் செய்யவேண்டிய வேலையின் மேன்மையையும் அதன் தெய்வீகத் தன்மையையும் விளக்கும் ஒரு அருமையான புஸ்தகம் விலை ரூ 0-6-0. 12-காபிகள் ரூ 4-0-0.

**குருவுபதேசம்:—**

இது ஸ்ரீமான் ஜி. கிருஷ்ணமூர்த்தி அவர்களால் எழுதப்பெற்ற ஆங்கில கிரந்தத்தின் மொழிபெயர்ப்பு. தமது குருநாதனிடமிருந்து தாம் அடைந்த உபதேசத்தை உலகத்தார் யாவரும் அறிந்து உய்யுமாறு வெளியிட்டிருக்கிறார்.

விலை ரூ 0—4—0. 25 காபிகள் ரூ 5—0—0.

மற்றொரு பதிப்பு விலை ரூ 0—1—0. 100 காபிகள் ரூ 5—8—0.

**நான் சென்ற மார்க்கம்:—**

இதுவும் ஸ்ரீமான் ஜி. கிருஷ்ணமூர்த்தியவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய நூலின் மொழிபெயர்ப்பு. சத்தியத்தைத் தேடிக் [illegible]க்குமாறு ஞானமார்க்கத்தில் நடந்த ஒரு மகானின் சுயஅனுபவங்கள். விலைரூ 0—4—0. 25-காபிகள் விலைரூ 5—0—0.

இப்புத்தகங்களெல்லாம் அடையாறு பிரம்மஞான தமிழ்பிரசார சங்கக் காரியதரிசியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தமிழ்நாடு
21080